# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-கடலூர் மாவட்டம்

(19.12.2015 முதல் 23.12.2015 வரை)

**கடந்த மூன்று நாட்களில் நிலவிய வானிலை (15.12.2015 முதல் 17.12.2015)**

கடலூர் மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்பட்டது. 1.5மி.மீ அளவு மழை பெய்தது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 31.0°C மற்றும் 22.0-24.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 74 முதல் 92 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 2-5 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 19.12.2015 | 20.12.2015 | 21.12.2015 | 22.12.2015 | 23.12.2015 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 3 | 3 | 3 | 3 | 3 |
| காற்று வரும் திசை | வடக்கு | வடக்கு | வடக்கு | வடக்கு | வடக்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 31 | 31 | 31 | 31 | 31 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 23 | 23 | 23 | 23 | 23 |
| ஈரப்பதம் | 76-88 | 76-88 | 76-88 | 76-88 | 76-88 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
2. காலையில் பனி உலர்ந்த பின்பு கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்புவதன் மூலம் குடற்புழு தாக்கத்தினை தவிர்க்கலாம்.
3. வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயிலில் உலர வைத்த பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
4. கொசு மற்றும் பூச்சிகளை விரட்ட நொச்சி,வேம்பு இலைகளை கொண்டு புகை மூட்டம் போட வேண்டும்.
5. ஆடுகளை மேடான இடத்தில் தங்கவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இதன் மூலம் ஈரம் மற்றும் சேற்றினால் ஏற்படும் குளம்பு அழுகல் நோயிலிருந்து பாதுகாக்கலாம்.
6. கால்நடைகளின் கொட்டகையின் அருகில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்வதன் மூலம் ஒட்டுண்ணிகளால் பரவும் நோய்களை தடுக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. வெள்ளம் புகுந்த பகுதிகளில் உள்ள நெல் வயல்களுக்கு ஒரு ஏக்கருக்கு 10 கிலோ யூரியா + 1 கிலோ பொட்டாஷ் மற்றும் 2 கிலோ வேப்பம் புண்ணாக்கு கொண்ட கலவையை மேல் உரமாக அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
2. உழவர்கள் தங்களுடைய வளரும் பருவத்தில் உள்ள பயிர்களுக்கு இலைவழியாக கைத்தெளிப்பான் மூலமாக யூரியா ஒரு சதவீதம் + சிங்க் சல்பேட் அரை சதவீதம் (ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீர் + 2 கிலோ யூரியா + 1 கிலோ சிங்க் சல்பேட்டை) காலை மற்றும் மாலை வேலையில் தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. உழவர்கள் நெல் விதையை 0.05 % அளவு கார்பன்டையாசின் என்ற மருந்தினை கொண்டு பதப்படுத்தி உபயோகிப்பதன் மூலம் நடுவு பயிரின் வேர் தாக்கத்தினை தடுக்கலாம்.